பக்கங்கள்:-22

காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 20 | சனிக்கிழமை | 03.02.2024 | அதிர்வு 186 |
|---|---|---|---|---|---|

## ‘தளபதி’ விஜய்யின் அரசியல் பயணத்துக்கு அமைச்சர் ஜீவன் வாழ்த்து



“சினிமா ஊடாக இரசிகர்களின் மனம் வென்ற தளபதி விஜய்,

06



# அமைச்சர் கெஹலிய சி.ஐ.டியினரால் கைது!

## பல மணிநேர விசாரணையின் பின்னர்

முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய தரமற்ற மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அவரிடம் நேற்று பல மணிநேரம் விசாரணை நடத்திய பின்னரே கைது இடம்பெற்றுள்ளது.

06

## 15 கிலோ கஞ்சாவுடன் யாழில் ஒருவர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகரில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் 15 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன் சந்தேகநபர் ஒருவரும் கைது

06




இன்னும் எட்டு மாதங்களில் ஜனாதிபதி தேர்தல். அதற்கு இடையில் எதிர்க்கட்சிகளுக்கு அரசியல் செய்வதற்கு இரண்டு நல்ல விடயங்கள் கிடைத்துவிட்டன – வெறும் வாய்க்கு மெல்லுவதற்கு அவல் கிடைத்த மாதிரி.

இன்னும் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு அரசைப் பிய்த்துதற நல்ல வாய்ப்பு.

வரும் புதன்கிழமை நாடாளுமன்றத்தின் புதிய அமர்வை சம்பிரதாயபூர்வமாக

06



# யானை, மொட்டு, கை ஓரணியில் புதிய கூட்டணி விரைவில் உதயம்

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன இணைந்து புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கான பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இதற்கான முன்னோட்ட கூட்டமொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், புதிய கூட்டணிக்கான ஆரம்பகட்ட பேச்சுகள் நடைபெற்றுள்ளதுடன், அடுத்துவரும் நாள்களில் கட்சிகளைத் தனித்தனியே சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்ச நாடு திரும்பிய பின்னர் மொட்டுக் கட்சியுடன் ஜனாதிபதி சந்திப்பை நடத்துவார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்கவுள்ளதை உறுதிப்படுத்தியுள்ள ஜனாதிபதி, அதற்காக ஆதரவளிக்குமாறு தோழமைக் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் (குதிரை சின்னம்), செந்தில் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (சேவல் சின்னம்), டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி. (வீணை சின்னம்) என்பனவும் கூட்டணியில் இணையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் அறிவிப்பு




2023 ஆம் ஆண்டுக்கான 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆண்கள் பாடசாலைகளுக்கான பட்டியலில் கொழும்பு ரோயல் கல்லூரிக்கான வெட்டுப்புள்ளி 179 என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு இந்து கல்லூரிக்கு150 புள்ளிகளும், யாழ். இந்து கல்லூரிக்கு 149 புள்ளிகளும், யாழ். மத்திய கல்லூரிக்கு 145 புள்ளிகளும், பதுளை சரஸ்வதி கல்லூரிக்கு 148 புள்ளிகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு 168 புள்ளிகளும், வேம்படி மகளிர் கல்லூரிக்கு 159 புள்ளிகளும், யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு 157 புள்ளிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரிக்கு 167 புள்ளிகளும், கேம்ப்ரிட்ஜ் கல்லூரிக்கு 155 புள்ளிகளும், அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா கல்லூரிக்கு 152 புள்ளிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஏனைய பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் தொடர்பான விவரங்களை றறற.அழந.பழள.டம எனும் இணையத்தளத்தில் பார்வையிடமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர்களின் போஷாக்கை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார்

## சாகல ரத்நாயக்க தகவல்




"மக்களின் வறுமையைப் போக்கி சிறுவர்களின் போஷாக்கை மேம்படுத்துவதில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார். அதற்காக ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன."

– இவ்வாறு தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ரமதா ஹோட்டலில் இடம்பெற்ற பாடசாலை மாணவர்களின் மதிய உணவு வேலைக்கான ஊட்டச்சத்து அரிசி வழங்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நமது நாட்டில் வறுமையை போக்கவும், மக்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் அவ்வப்போது செயல்படுத்தப்பட்டு வந்தன. சமுர்த்தி வேலைத் திட்டம் பிரதான இடத்தைப் பெற்றதுடன், தற்போதைய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அஸ்வெசும திட்டத்தின் ஊடாக அது மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

அஸ்வெசும திட்டம் அரசியல் சாராமல், தரவு அடிப்படையில் வெளிப்படைத் தன்மையுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தரவு அடிப்படையிலான ஆய்வுகள் மற்றும் கணக்கீடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இறுதிப் பட்டியலின்படி, மக்கள் மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளுக்கான நிதி நேரடியாக பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும். இந்த நாட்டில் வறுமையை ஒழிப்பதில் அஸ்வெசும வலுவான பங்களிப்பை வழங்கும் என்று நம்புகிறோம்.

மேலும், ஒரு நாடாக நாம் நிலையான பொருளாதார வளர்ச்சியை உருவாக்க வேண்டும். அந்த நோக்கத்தில் சுற்றுலா, விவசாயம் மற்றும் உற்பத்தித் துறைகளில் அதிக வளர்ச்சியை எட்டுவதற்கு அரசாங்கம் திட்டமிட்ட வகையில் செயல்பட்டு வருகிறது. இலங்கைக்கு அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது, விவசாயத்தை நவீனமயமாக்குவது மற்றும் இலங்கையை உற்பத்தி மையமாக கட்டியெழுப்புவது குறித்து கவனம் செலுத்தப்படுகிறது.

சவால்களுக்கு மத்தியிலும் இலங்கை இன்று பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்து வருகிறது. வாழ்க்கைச் செலவில் கணிசமான அதிகரிப்பு உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்ளும் போதும், நாட்டிற்கான புதிய வருமான வழிகளை உருவாக்குவதற்கும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் மும்முரமாக செயல்பட்டு வருகிறது. நாட்டிற்கு வருமானம் ஈட்டுவதில் சுற்றுலாத் துறை முன்னணியில் உள்ளது. மேலும் நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவது மட்டுமல்லாமல், சுற்றுலாப் பயணிகளின் வசதிகளின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் நாள்தோறும் அதிக பணத்தை செலவிடும் உயர்தர சுற்றுலாப் பயணிகளை அழைத்து வர அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கடந்த காலத்தில் பின்பற்றப்பட்ட உரக் கொள்கையினால் பாதிக்கப்பட்ட விவசாயத் துறையை நவீனமயப்படுத்த விரிவான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது உள்ளிட்ட வர்த்தக ஒப்பந்தங்களில் மூலோபாய கூட்டாண்மைகள் மற்றும் திருத்தங்கள் மூலம் உற்பத்திகளை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

புதுப்பிக்கத்தக்க வலு சக்திக்காக இலங்கைக்கு சொந்தமான சுமார் 18 ஆயிரம் மெகாவொட் சக்தியுடன், பொருளாதாரத்தில் தனித்துவமான இடத்தை இத்துறை பெறும். பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டங்களை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கும் அதிகளவான முதலீட்டாளர்களை இலங்கைக்குள் ஈர்ப்பதற்கும் நாம் செயற்பட்டு வருகின்றோம். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதன் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன் அரசியல் சவால்களுக்கு தீர்வு காண்பதற்கும் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது." – என்றார்.

# சட்டவிரோதமாகப் படகு மூலம் இந்தியா சென்ற ஒருவர் கைது

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாகப் படகு மூலம் தொண்டி கடற்கரை சென்று அங்கிருந்து மண்டபம் பகுதிக்குச் சென்ற ஒருவர் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இஸ்தோர் அமல்ராஜ் (வயது 33, மன்னார்) என்பவரே இவ்வாறு இந்தியா சென்றுள்ளார்.

மேற்படி நபர் யாழ்ப்பாணம், குருநகரில் இருந்து மீன்பிடிப் படகில் சென்று தொண்டியில் இறங்கி அங்கிருந்து

இராமேஸ்வரம் பஸ்ஸில் மண்டபம் பகுதிக்குச் சென்ற சமயம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஏற்கனவே இரு தடவை இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில் மீண்டும் சட்டவிரோதமாக இந்தியா சென்றுள்ளார்.

தலைமன்னாரில் இருந்தே படகில் வந்ததாகத் தமிழகப் பொலிஸாரிடம் இவர் பொய் உரைத்தபோதும் கைத் தொலைபேசியில் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயக் கோபுரம் உள்ளிட்டவற்றை ஒளிப்படம் எடுத்திருப்பதன் மூலம் யாழ். குருநகரில் இருந்து பயணித்தமை இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளது.

இதேநேரம் இவர் பயணித்த படகின் இலக்கமும் ஒளிப்படத்தில் தெரிகின்றது.






# மாத்தறை கலை விழா நிகழ்ச்சிகள் ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்

இலங்கை மற்றும் சர்வதேச நடைமுறை கலை – இசையை மையப்படுத்திய கலை விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று ஆரம்பமானது.

பொருளாதார மற்றும் சமூக மறுமலர்ச்சிக்கான கலாச்சார சமூகத்தின் ஒத்துழைப்புடன் கலை அமைப்புகளை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கலை விழா நாளை வரை மாத்தறை கோட்டையில் நடைபெறுகிறது.

காலி சாகித்திய விழாவின் பின்னர், வருடத்தின் ஆரம்பத்தில் மாத்தறையின் தென் கரையோரப் பகுதிகளில் கலை விழா நடத்தப்படுவது இலங்கையருக்கும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் கிடைக்கும் தனித்துவமான அனுபவமாகும்.

இதன்போது கலை, ஆக்கம், கண்காட்சிகள், இசை நிகழ்ச்சிகள், பயிற்சி பட்டறைகள் மற்றும் கலந்துரையாடல்கள், சமூக சந்தைகள் உள்ளிட்ட பல கலாச்சார அம்சங்கள் இங்கு இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, தென் மாகாண ஆளுநர் விலீ கமகே, நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணா கொடிதுவக்கு, நிபுன ரணவக்க, முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்ரம, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கயான் சஞ்சீவ, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.










# கடந்த ஆண்டில் ஆயுர்வேதக் கூட்டுத்தாபனம் 195 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது

## சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தகவல்



**“ஆயுர்வேதக் கூட்டுத்தாபனம் 2023 இல் 195 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது. இந்த இலாபமானது 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் கிடைத்த அதிகூடிய இலாபமாகும். ஆயுர்வேதக் கூட்டுத்தாபனத்தின் புதிய நிர்வாகத்தினூடாக இந்த இலாபத்தை ஈட்ட முடிந்தது.”**

**- இவ்வாறு சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நமது நாட்டில் மூலிகைகள் ஏராளமாக உள்ளன. ஆனால் நீண்ட காலமாக சுதேச வைத்தியத்திற்கு அவசியமான மூலிகைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. எனவே, வர்த்தக அடிப்படையில் சுதேச மூலிகைச் செடிகளை நட நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறிப்பாக மருந்து உற்பத்திக்கான இறக்குமதி மூலப்பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது. இதன் மூலம் நாம் செலவழிக்கும் அந்நியச் செலாவணியை சேமிக்க முடியும்.

ஒரு சில பகுதிகளில் அரசுக்குச் சொந்தமான பயிரிடப்படாத நிலங்கள் உள்ளன. அந்த நிலங்களில் மூலிகைப் பயிர்ச் செய்கைத் திட்டத்தை செயல்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிக சம்பளம் கேட்டு அரச ஊழியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த மூலிகைச் செடிகளைப் பயிரிட்டால் சம்பளத்தை விட அதிகமாக வருமானம் ஈட்டலாம். அரச ஊழியர்களும் இவற்றை வணிக ரீதியாக பயிரிட வாய்ப்பு உள்ளது.

கடந்த காலங்களில் நட்டமடைந்து வந்த ஆயுர்வேதக் கூட்டுத்தாபனம் 2023 இல் 195 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது. எனவே, நட்டமடைந்து அரசாங்கத்துக்குச் சுமையாக இருந்த ஒரு நிறுவனத்தை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றி நாட்டுக்கே முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளோம்.

ஆயுர்வேதக் கூட்டுத்தாபனத்தில் உருவாக்கப்பட்ட புதிய நிர்வாகமே இந்த இலாபகரமான நிலையை உருவாக்கியுள்ளது என்பதைக் கூற வேண்டும்.

அத்துடன், எமது சுற்றுலாத்துறைக்கு அதிக வருமானத்தை வழங்கும் நோக்கில் பாரம்பரிய சுதேச மருத்துவ முறை மேம்படுத்தப்பட வேண்டும். சுதேச வைத்திய முறையை ஒருங்கிணைத்து நாட்டில் தற்போதுள்ள சுற்றுலா ஹோட்டல்களில் இருந்து அதிகபட்ச இலாபத்தைப் பெற முடியும்.

நம் நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் குறைவான பணத்தை செலவிடுகின்றனர். சில சமயங்களில் அவர்கள் தேர்ந்தெடுத்த இடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை சென்ற பிறகு மீண்டும் இந்நாட்டுக்கு வருவதில்லை.

ஆனால் இங்கு ஆயுர்வேத சிகிச்சைக்காக வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சுதேச சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தினால், அவர்கள் சிகிச்சை பெற குறைந்தது ஆறு அல்லது ஏழு முறை இந்த நாட்டிற்கு வருகை தர வேண்டும். இதன் மூலம் இந்நாடு அதிக அளவில் அந்நியச் செலாவணியைப் பெற முடியும்.

ஒரு ஆரோக்கியமான பசுமை உணவு கலாசாரம் உள்நாட்டு மருத்துவ முறையில் உள்ளது. அந்த விடயங்களையும் நாம் இதனுடன் இணைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறாக சுதேச மருத்துவ முறையின் அடிப்படையில் எமது சுற்றுலாத் துறையை முன்னெடுத்துச் செல்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்க முடியும்.

ஆயுர்வேதக் கூட்டுத்தாபனத்தில், முதல் தடவையாக, ‘பொடி மந்திரா’ என்ற சிறப்பு ஆயுர்வேத மசாஜ் முறை அறிமுகப்படுத்தப்படுகிறது. வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வகையான மசாஜ் முறைகள் உள்ளன. ஆனால் எமது மசாஜ் முறையானது சுதேச ஆயுர்வேத முறை மூலம் பல்வேறு நோய்களை தடுக்கக்கூடியதாக இருப்பதே அதன் சிறப்பாகும். எனவே இவ்விடயத்திலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.” – என்றார்.



## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வைபவ ரீதியாக உரையாற்றி ஆரம்பித்து வைக்கின்றார்.

அந்தத் தொடர் ஆரம்பமானதுமே நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் என்ற இரண்டு அதிர்வேட்டுகளை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி களத்தில் தெறிக்க விட இருப்பதாகத் தெரிகின்றது.

ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்னாள் சுகாதார அமைச்சரும் தற்போதைய சுற்றாடல் துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெலவுக்கு எதிரானது.

கடந்த வருடம் அவர் சுகாதார அமைச்சராக இருந்தபோது அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசுத் தரப்பு எம்.பிக்கள் ஒன்று சேர்ந்து முறியடித்தனர்.

இப்போது அவர் அமைச்சராக இருந்த காலத்தில் இடம்பெற்ற மருந்துக் கொள்வனவு ஊழல் தொடர்பான விடயத்தில் அவர் கைது செய்யப்பட்டுள்ள சூழலில், இவ்விடயத்தில் எதிரணியின் கை ஓங்கி ஒலிக்கும் என்பது வெளிப்படையானது.

இந்த விவகாரத்தை வைத்து எதிரணி நாடாளுமன்றத்தில் ஒரு கலக்கு கலக்கும் என எதிர்பார்க்கலாம்.

அடுத்த நம்பிக்கையில்லாப் பிரேரணை - பெரும்பாலும் சபாநாயகருக்கு எதிராக வரும் எனக் கருதப்படுகின்றது.

நிகழ்நிலைக. காப்புச் சட்டம் தொடர்பில் செய்யப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் வழிகாட்டிய 34 திருத்தங்களில் 9 திருத்தங்கள் செய்யப்படவே இல்லை என்று பட்டியலிடும் எதிர்க்கட்சிகள், அவற்றைச் செய்யாமல் ஒரு சட்டமூலம் நிறைவேறுவதற்கு இடம் அளித்ததன் மூலமும், அத்தகைய தவறான முறையில் முன்னெடுக்கப்பட்ட சட்டமூலம் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று அதற்கு சான்று அளித்ததன் மூலமும், நாடாளுமன்றுக்கு நம்பிக்கை அற்ற விதத்தில் சபாநாயகர் செயற்பட்டுள்ளார் என்று தெரிவித்து அவருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை முன்வைக்க எதிர்க்கட்சிகள் தரப்புத் தயாராகி வருவதாக உள்வீட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சட்டத்தை யாக்கும் நடவடிக்கையில் விடப்பட்ட தவறுகளை மாற்றி அமைக்கும் விதத்தில், தற்போது நடைமுறைக்கு வந்துள்ள நிகழ்நிலை காப்பு சட்டத்தில் உரிய திருத்தங்களை உடன் விரைந்து செய்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சரான டிரான் அலஸ் நடவடிக்கை எடுக்காவிட்டால் சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கை இல்லாப் பிரேரணை வந்து ஆளுந்தரபின் நிலைமை சந்தி சிரிக்கும் விவகாரமாக மாறுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

\+ + +

குழம்பிப் போயிருக்கும் தமிழரசுக் கட்சியின் கட்டமைப்பு ரீதியான செயற்பாடுகளில் அடுத்த கட்டக் குழப்பம் எதிர்வரும் 11 ஆம் திகதி வவுனியாவில் அரங்கேறுகின்றது என்று தெரிகிறது.

பழைய மத்திய குழுவின் கூட்டத்தை அன்றைய தினம் வவுனியாவில் கூட்டுவதற்கு மாவை -சிறீதரன் கூட்டாக நடவடிக்கை எடுத்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

தமிழரசுக் கட்சியின் முன்னைய மத்திய குழு முடிவு பெற்று, பொதுக்குழு கூடி, புதிய நிர்வாகிகளையும் தேர்வு செய்துவிட்டது என்பதுதான் சுமந்திரன் தரப்பின் நிலைப்பாடு.

இப்போது கட்சியின் தலைவர் சிறீதரன்தான் என்பதைத் தெளிவு படுத்தி அவருக்கே கடிதம் எழுதிவிட்டார் சுமந்திரன். அந்தக் கடிதத்தில் தம்மை 'முன்னாள் பிரதிப் பொதுச் செயலாளர்' என்று குறிப்பிட்டு, ஒப்பமிட்டதன் மூலம் மாவை சேனாதிராஜாவின் கீழ் இயங்கிய நிர்வாகக் காலம் முடிந்து விட்டது, சிறீதரன் தலைமையிலான புதிய நிர்வாகமே இப்பொழுது கட்சியை நடத்த வேண்டும், இதுவே தமது நிலைப்பாடு என்பதை சுமந்திரன் வெளிப்படுத்தி விட்டார்.

இந்தப் பின்புலத்தில் மாவை தலைமையிலான முன்னைய மத்திய குழு இன்னும் அதிகாரத்திலும் செயற்பாட்டிலும் இருக்கின்றது என்ற கருத்து வெளிப்படுத்தும் விதத்தில் கூட்டப்படும் பழைய மத்திய குழுக் கூட்டத்தை சுமந்திரன் தரப்பு ஏற்றுக் கொள்ளுமா? அதில் கலந்து கொள்ளுமா? தெரியவில்லை.

கடந்த 27ஆம் திகதி காலையில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுவுக்கு பின்னர் வரும் 11ஆம் திகதி நடைபெற உள்ள அதே மத்திய குழுவின் கூட்டம் செல்லுபடியானது என்று ஏற்றுக் கொண்டு அதில் கலந்து கொண்டால், இந்த இரண்டுக்கும் இடையில் 27ஆம் திகதி மதிய இடைவேளைக்கு முன்னரும் பின்னரும் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் இடம்பெற்ற புதிய நிர்வாக தேர்வு செல்லுபடியற்றது என்பதை ஏற்றுக் கொண்டதாகிவிடும்.

அந்தத் தெரிவு செல்லுபடியானது என்றால் அதன் அடிப்படையிலான புதிய மத்திய குழுவின் கூட்டமே இனிக் கூட்டப்பட வேண்டும்.

பழைய மத்திய குழுவின் கூட்டத்தை கூட்டும் போது, அதில் பங்கு பற்றுவதன் மூலம் 27ஆம் திகதி பொதுக்குழுவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் புதிய நிர்வாகிகள் தெரிவு அங்கீகரிக்கப்படாதது என்ற நிலைப்பாட்டை சுமந்திரன் தரப்பு எடுக்குமா? தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம். குழப்பங்கள் தொடரும் என்பது மட்டும் நிச்சயமாகத் தோன்றுகின்றது.

## 15 கிலோ கஞ்சாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

செய்யப்பட்டுள்ளார்

மானிப்பாயைச் சேர்ந்த 46 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்,

அவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப் படவுள்ளார்.

## அமைச்சர் கெஹலிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் வாக்குமூலம் வழங்குமாறு அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்குக் கொழும்பு, மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டிருந்தது. அத்துடன், அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடையும் விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், வாக்குமூலம் வழங்குவதற்காக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுக் காலை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வந்திருந்தார். பல மணிநேர விசாரணையின் பின்னர் அவர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

## தளபதி விஜய்யின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசியல் ஊடாகவும் மக்களின் மனங்களை வெல்லும் வகையில் செயற்படுவார் என்ற முழு நம்பிக்கை உள்ளது. எனவே, விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றிப் பயணம் தொடர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்."

– இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜயின் அரசியல் பிரவேசம் தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு:-

"நடிகர் விஜய் சினிமாத் துறையில் உச்சம் தொட்டவர். அவருக்கென இரசிகர்கள் பட்டாளமே உள்ளது. தளபதியென இரசிகர்கள் அவரைக் கொண்டாடும் அளவுக்கு சினிமாத்துறையில் நேர்த்தியாகவும், நேர்மையாகவும் நடத்துகொண்டுள்ளார். அதுமட்டுமல்ல தனக்காக உருவான இரசிகர் மன்றத்தை விஜய் மக்கள் இயக்கமாக மாற்றி அதன் ஊடாக மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து வந்தார்.

இந்நிலையில் அப்பணிகளை மென்மேலும் முன்னெடுப்பதற்காகவும், சமத்துவம், சமூக நீதிக்காகவும் விஜய் மக்கள் இயக்கம், தமிழக வெற்றிக் கழகமாக அரசியல் பயணத்தை ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது.

சினிமாவில் உள்ள செல்வாக்கை மட்டும் பயன்படுத்தி எடுத்தோம், கவிழ்த்தோம் என அரசியல் பயணத்தை ஆரம்பிக்காமல் நன்கு திட்டமிடலுடன் அப்பயணத்தை விஜய் ஆரம்பித்துள்ளார் என்பது அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை மூலம் உறுதியாகின்றது.

நல்லாட்சி, சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை மையப்படுத்தியமாக அரசியல் பயணம் அமையும் என விஜய் அறிவித்துள்ளதை வரவேற்கின்றோம். இலங்கையில் மலையகத் தமிழர்களுக்குச் சமத்துவம், சமூக நீதியை வலியுறுத்தியே எமது அரசியல் பயணமும் தொடர்கின்றது. அந்தவகையில் மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கான பயணத்தை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பயணம் வெற்றியளிக்க மலையக மக்கள் சார்பிலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இணைந்து பயணிக்கக்கூடிய இடங்களில் இணைந்து பயணிக்கவும், புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டிய இடங்களில் புரிந்துணர்வுடன் செயற்படவும் நாம் தயாராகவே இருக்கின்றோம் என்ற செய்தியையும் விஜய்க்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளேன்." – என்றார்.



# பரசூட் வீரராக சாகசம் செய்த ராணுவத் தளபதிக்கு பாராட்டு




இராணுவ பரசூட் வீரராக தனது திறமையை வெளிக் காட்டிய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை இராணுவத்தின் பரசூட் சாகச வரலாற்றைப் புதுப்பிக்கும் வகையில் குடாஓயா கொமாண்டோ ரெஜிமண்ட் பயிற்சி பாடசாலையில் கடந்த 22 ஆம் திகதி இராணுவத் தளபதி பரசூட் சாகசம் செய்தார்.

இராணுவத் தலைமைத்துவத்திற்கு முன்னுதாரண-மாக செயற்பட்ட லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேவின் முயற்சியையும், அர்பணிப்பையும் பாராட்டி இராணுவ தளபதிக்கு எயார்போன் சின்னம் அணிவிக்கப்பட்டது.

தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவினால் இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாடாளுமன்ற நாடகம்

பல்வேறு சர்ச்சைகள், குழப்பங்கள், கண்டனங்களுக்கு மத்தியில் நிகழ்நிலை (ஒன்லைன்) காப்புச் சட்டத்தை ரணில் விக்கிரமசிங்க அரசு நிறைவேற்றி இருப்பதாக அறிவித்துள்ள போதிலும் - அந்தச் சட்ட மூலத்தில் அது நிறைவேற்றப்பட்டதாக சான்றளித்து ஒப்பமிட்டு, சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளமையை சபாநாயகர் உறுதிப்படுத்தி உள்ள போதிலும் - விடயம் முடிந்து விடவில்லை. இன்னும் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது என்று அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டாலும், அப்படியாயின் அதை மாற்றுங்கள் என்று ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் இலங்கை அரசுக்கு வழிகாட்டல் வழங்கி இருக்கின்றது.

இலங்கை அரசை அதன் மனித உரிமைகள் பேணுவது தொடர்பான கடப்பாடுகளை உறுதிப்படுத்தும் விதத்தில் நிகழ்நிலை காப்புச் சட்டத்தை திருத்தி அமைப்பது குறித்து பரிசீலிக்கும்படி ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் கோரியுள்ளது.

இலங்கை அரசு கொண்டுவந்துள்ள நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் நாட்டில் கருத்து வெளியிடும் சுதந்திரம் உட்பட மனித உரிமைகள் விடயத்தில் எல்லை கடந்த பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் அதன் எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளது.

"(இந்த விவகாரத்தை ஒட்டி) சிவில் சமூகம் மற்றும் தொழில் குழுக்கள் வெளிப்படுத்தி வரும் கவலைகள், கரிசனைகளை நிவர்த்தி செய்வதற்கும், மனித உரிமைகள் தொடர்பான கடப்பாடுகள், கடமைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கும் சட்டத்தில் திருத்தம் செய்வதை பரிசீலிக்குமாறு நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்" என்றும் அந்தப் பதிவில் கூறப்பட்டுள்ளது.

உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பாரிய விமர்சனங்களுக்கு உள்ளான இந்தச் சட்டம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் அங்கீகரிக்கப்பட்டதையடுத்து நேற்று முதினம் சட்டமாக்கப்பட்டது.

சபாநாயகர் சான்றளித்த சட்டமூலத்தை பரிசீலித்த சட்ட வட்டாரங்கள் அந்தச் சட்டமூலத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டிய 9 விடயங்கள் திருத்தப்படவே இல்லை என்று பூர்வாங்கத் தகவல்களை வெளியிட்டுள்ளன.

செய்யப்படாத திருத்தங்கள் பற்றிய விவரங்களை அந்தச்சட்டவட்டாரங்கள்பெரும்பாலும் இன்று விவரமாக அட்டவணைப்படுத்தி வெளியிடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயினும், உயர்நீதிமன்ற வழிகாட்டலைப் பின்பற்றாத நிலையில் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது என சபாநாயகரினால் சான்றளிக்கப்பட்ட ஒரு சட்டத்தை நீதிமுறையில் சவாலுக்கு உட்படுத்தி மாற்றியமைப்பது சட்டரீதியில் இலகுவானதல்ல. நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டம் ஒன்றின் செயல்படுதன்மை அல்லது பொருத்தப்பாடு பற்றிய விடயத்தை உயர் நீதிமன்றம் சவாலுக்கு உட்படுத்த முடியாது என்பதால் இது விடயத்தில் சட்ட ரீதியான நிவாரணம் தேடுவது சுலபமானது அல்ல.

இந்த சர்ச்சை தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை மூன்று விதமாக நடக்கலாம்.

ஒன்று - உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ள திருத்தங்கள் செய்யப்படவில்லை என்று அவற்றை வரிசைப்படுத்தி, மீண்டும் உயர்நீதிமன்றத்திடம் போகலாம். ஆனால் அந்த வழியில் உயர் நீதிமன்றம் ஏதேனும் சட்ட ரீதியான நிவாரணம் வழங்க முடியுமா என்பது சந்தேகமே.

இரண்டாவது - உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டல் படி நிறைவேற்றப்படாத ஒரு சட்டமூலத்தை அது நிறைவேறியதாக சான்றளித்த சபாநாயகருக்கு எதிராக ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க் கட்சிகள் கொண்டு வந்து, அந்த விவகாரத்தின் மூலம் இவ்விடயத்தில் அரசு தரப்பின் திருகுதாளங்களையும் அதற்கு இணங்கி செயற்பட்ட சபாநாயகரின் போக்கையும் அம்பலப்படுத்தலாம். தேர்தல் சமயத்தில் இந்த நடவடிக்கை ஆளுந்தரப்புக்கு பெரும் சங்கடங்களை நிச்சயம் தரும்.

மூன்றாவது - இந்த சர்ச்சைகளை தவிர்ப்பதற்காக இந்தச் சட்டத்தில் உயர் நீதிமன்ற வழிகாட்டலுக்கு முரணாக முன்னெடுக்கப்பட்ட பிரிவுகளை அரசாங்கமே ஒரு திருத்தச் சட்டமுலமாக சமர்ப்பித்து, நிறைவேற்றி, ஏற்பட்டிருக்கும் குழப்பங்களை சுமூகமாக முடிவுக்கு கொண்டு வரலாம். ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தின் கோரிக்கையையும் அரசு ஏற்றுச் செயற்பட்டதாக அது அர்த்தப்படுத்தப்படும்.

ஏற்கனவே இப்போது நிறைவேற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் நாடாளுமன்றுக்குக் கொண்டுவரப்பட்டு, அவசர அவசரமாக அதை நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்ட சமயம், அதை ஒட்டி கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் காரசாரமான விவாதங்களுக்கு மத்தியில், சட்டமூலத்தைச் சமர்ப்பித்தபொதுபாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தச் சட்ட மூலத்தில் பெரிய தவறுகள், முரண்கள், பிழைகள் இருந்தால் காலகதியில் சட்டத் திருத்தங்கள் மூலம் அவற்றை திருத்துவோம் என்று அப்போது அவர் வாக்குறுதி அளித்திருந்தார்.

இந்தச் சட்டத்தினால் அரசுக்கு ஏற்பட்டிருக்கும் அசௌகரியங்கள், சங்கடங்களை அரசே தவிர்ப்பதற்கு இதுதான் உசிதமான - பொருத்தமான - வழி. அதை அரசுத் தரப்பு எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து விரைந்து செய்வதே அரசுத் தரப்புக்கும் நல்லது.

# கட்சி தொடங்கினார் விஜய்: அரசியல் தலைவர்கள் வாழ்த்து

நடிகர் விஜய் கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளார். இதனை "தமிழக வெற்றி கழகம்" என அதனை பதிவு செய்துள் ளார்.

டில்லியில் உள்ள இந்திய தலைமை தேர்தல் ஆணை யத்திற்கு சென்ற நடிகர் விஜயின் மக்கள் இயக்க பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், அதனை கட்சியாக உத்தி யோகபூர்வமாக பதிவு செய்துள்ளார்.

அரசியல் கட்சி தொடங்கியிருக்கும் நடிகர் விஜய்க்கு தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வரவேற்பு தெரி வித்துள்ளார்.

தமிழக அரசியலில் திரைப்பட நடிகர்கள் பல ஆண்டு காலமாக கோலோச்சி வருகிறார்கள். எம்.ஜி.ஆர்., ஜெய லலிதா, விஜயகாந்த், கமல் ஹாசன் போன்ற தலைவர்க ளைத் தொடர்ந்து, சரத்குமார், கருணாஸ் உள்ளிட்டோ ரும் தனித்தனியாக அரசியல் கட்சிகளைத் தொடங்கி நடத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் தற்போது நடிகர் விஜய் அரசியல் கட்சி தொடங்கியிருக்கிறார். தேர்தல் ஆணையம் அங்கீகாரம் வழங்கிய பின்னர் கட்சியின் கொடி, சின்னம் அறிவிக் கப்படும் என்று அறிவித்துள்ளார்.

விஜய் அரசியல் கட்சி தொடங்குவது பல காலமாக பேசப்பட்டு வந்தாலும், இன்று அரசியல் கட்சியைத் தொடங்கி யிருப்பது தமிழக அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தி யிருக்கிறது.

இந்த நிலையில், தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணா மலை, விஜய் அரசியல் கட்சி தொடங்கியிருப்பதற்கு வரவேற்பு தெரிவித்து எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"தமிழக மக்களைச் சுரண்டிக் கொண்டிருக்கும் ஊழல் அரசியலுக்கு எதிராகவும், பாகுபாடற்ற, நேர்மையான, அரசியல் மாற்றம் உருவாகவும், மக்களுக்காகப் பணி யாற்ற, 'தமிழக வெற்றி கழகம்' என்ற பெயரில் புதிய கட்சி தொடங்கியிருக்கும் சகோதரர் விஜய் அவர்களை வாழ்த்தி வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை, "மக்களைப் பிளவுபடுத்துகிற அரசியலுக்கு எதிராகவும், மக்களின் வளர்ச்சிக்கு தடையாகவும் இருக் கிற சக்திகளுக்கு எதிராக கருத்து கூறியிருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது" என தமிழக காங்கிரஸ் தலை வர் கே.எஸ்.அழகிரி, நடிகர் விஜய்யின் அரசியல் கட்சி அறிவிப்புக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

"இந்திய ஜனநாயகத்தில் யார் வேண்டுமானாலும் அரசியல் இயக்கம் ஆரம்பிக்க உரிமையுள்ளது. நடிகர் விஜய் அரசி யல் இயக்கம் தொடங்கியதற்கு நாம் அனைவரும் சேர்ந்து பாராட்டு தெரிவிப்போம். அவரது மக்கள் பணி சிறக்கட்டும்" என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

"கட்சி தொடங்குவது எளிது. தொடர்வதுதான் கடினம்.



தொடங்கும்போது இருக்கும் ஆர்வமும் ஈடுபாடும் கடைசி வரை இருந்தது என்றாலும் யார் வேண்டும் என்றாலும் வெல்லலாம்" என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

"தமிழகத்துக்கு நிறைய தலைவர்கள் தேவைப்படுகி றார்கள். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தோர்தான் தலைவராக இருக்கவேண்டும் என்பதில்லை. நிறைய இளைய தலை வர்கள் தேவைப்படுகிறார்கள். அதனால் விஜய் வந்ததை நான் வரவேற்கிறேன். நிறைய தலைவர்கள் வரவேண்டும்" என்று ஆளுநர் தமிழிசை கூறியுள்ளார்.

இதேவேளை, "யார் வேண்டுமானாலும் கட்சி ஆரம்பிக் கலாம். அரசியல் என்பது பெருங்கடல். அதில் மூழ்கிப் போனவர்களும் உண்டு. நீந்தி கரை சேர்ந்தவர்களும் உண்டு. விஜய் என்னவாகப் போகிறார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்" என அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

# வரவு - செலவு திட்டத்திற்கு எதிர்ப்பு: 8 ஆம் திகதி தி.மு.கவினர் போராட்டம்




இந்தியாவின் இடைக்கால வரவு செலவு திட்டத்துக்கு எதிராக தி.மு.க. எதிர்வரும் 8 ஆம் திகதி கண்டன போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனால், தாக்கல் செய்யப்பட்ட மேற்படி வரவு செலவு திட்டத்தில் தமிழ்நாடு திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தே இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது குறித்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

" நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனால் தாக்கல் செய்யப்பட்ட வரவு செலவுதிட்டத்தில், தமிழ்நாடு திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து தி.மு.க எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்புவார்கள். " என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் எதிர்வரும் 8 ஆம் திகதி நாடாளுமன்ற வளாகத்தில் காந்தியடிகள் சிலைக்கு முன்னால் தமது எம்.பி.க்கள் போராட்டம் நடத்தவுள்ளனர் என தி.மு.க அறிவித்துள்ளது.

# தேர்தலில் முறைகேடுக்கு எதிராக போராட்டம்: டில்லியில் ஆம் ஆத்மி எம்.எல்.ஏக்கள் கைது






டில்லியின் சண்டிகர் மேயர் தேர்தலில் முறைகேடு இடம் பெற்றது என கூறி பா.ஜ.க. தலைமையகத்துக்கு வெளியே ஆம் ஆத்மி கட்சியினர் நேற்று போராட்டம் நடத்தினர்.

இதன்போது, ஆம் ஆத்மி எம்.எல்.ஏக்கள் மற்றும் கட்சி தொண்டர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கைது நடவடிக்கைக்கு முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் டில்லியில் கூடுதல் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த நிலையில், டில்லி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“ஆம் ஆத்மி எம்.எல்.ஏக்கள், கவுன்சிலர்கள் மற்றும் தொண்டர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்படுகிறார்கள். இங்கு என்ன நடக்கிறது?” என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இரு கட்சிகளின் போராட்டத்தை கருத்தில் கொண்டு டில்லியில் நேற்று பண்டிட் தீன் தயாள் உபாத்யாயா மார்க் செல்லும் பல வீதிகளில் பொலிஸார் தடுப்புகள் அமைத்தனர்.

அத்தோடு, பா.ஜ.க. மற்றும் ஆம் ஆத்மி கட்சியின் தலைமையகம் அருகே தடுப்புகள் அமைத்தும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஆம் ஆத்மி கட்சியின் தலைமை செய்தி தொடர்பாளர் பிரியங்கா கக்கர், “எங்கள் தலைவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இது ஜனநாயகத்திற்கு மிகவும் ஆபத்தானது” – என்றார்.

# இப்போதைக்கு தனித்து போட்டி இல்லை மக்களவை தேர்தலில் கூட்டணி போட்டி

## பா.ம.க. பொதுக்குழு கூட்டத்தில் ராமதாஸ் கருத்து



“இப்போதைக்கு தனித்துப் போட்டி இல்லை, மக்களவைத் தேர்தலில் கூட்டணி அமைத்து பாமக போட்டியிடும்” என்று அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார்.

பா.ம.க. சிறப்பு பொதுக்குழு கூட்டம் சென்னை எழும்பூரில் உள்ள ராணி மெய்யம்மை அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தலைமை தாங்கினார். பா.ம.க. தலைவர் அன்புமணி உள்ளிட்ட நிர்வாகிகள், தொண்டர்கள் என ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பங்கேற்றனர்.

தமிழகத்தில் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பை உடனே நடத்த வேண்டும், நிலம் கையகப்படுத்த தடை விதிக்க வேண்டும் உள்ளிட்ட 24 தீர்மானங்கள் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டன.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் மாநில நலனிலும், தேசிய நலனிலும் அக்கறை கொண்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிடவும், எந்தெந்தக் கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது என்பது குறித்து முடிவெடுக்கும் அதிகாரத்தை கட்சியின் நிறுவனர் ராமதாஸ்க்கு வழங்குவதாகவும் பொதுக் குழு கூட்டத்தில் அரசியல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதைத்தொடர்ந்து ராமதாஸ் உரையாற்றுகையில்,

“கூட்டணி இல்லாமல் தனித்து போட்டியிட்டாலும் கூட, குறைந்தது 7 இடங்களில் பாமக வெற்றி பெற்றாக வேண்டும். ஆனால், தனித்து போட்டியிட இப்போது நாம் தயாராக இல்லை.

பா.ம.க. அடையாளம் கண்டுள்ள 12 மக்களவைத் தொகுதிகளில் பூத் கொமிட்டி அமைக்கப்பட்டுவிட்டது. கூட்டணி இல்லாமல், அப்போதே தனித்து போட்டியிட்டிருந்தால், தமிழகத்தில் இன்று பா.ம.க. ஆட்சியில் அமர்ந்திருக்கும். எதிர்வரும் பேரவை தேர்தலில் இது சாத்தியமாகும். ‘பாரத ரத்னா’ உள்பட எந்த விருதை எனக்கு மத்திய அரசு கொடுத்தாலும், அதை நான் வாங்க மாட்டேன். ” – என்றார்.




**உரலார் கேள்வி :- அயோத்தி இராம ஜென்ம பூமி இராமர் ஆலயம், நீதிமன்ற உத்தரவோடு அமைக்கப்பட்டு, இஸ்லாமியர்கள் பலர் கூட அதனை அங்கீகரித்த பிறகும், இன்னும் நம்மவர் சிலர் இராமர் கோவில் பற்றிக் கண்டனம் தெரிவித்தபடி இருக்கிறார்களே. அது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** வேற்று நாட்டவனான நான், இதுபற்றி அதிகம் பேசுவது நாகரீகம் ஆகாது. ஆனாலும் இந்து மதத்தவன் எனும் தொடர்பு இருப்பதால், என் மனக் கருத்தைப் பதிவு செய்யலாம் என்று நினைக்கிறேன்.



ஒரு தாய்க்கு ஒரே மகன் இருந்தானாம். அவனுக்குத் திருமணமானதும், பெருநோய் ஒன்று அவனைப் பற்றிக்கொள்ள, அவன் செயலற்ற நிலையில் இருக்க வேண்டி வந்ததாம். அந் நிலையில் வசதியான வீட்டில் இருந்து வந்த மருமகள், கணவனின் இயலாமையைப் பயன்படுத்தி, அவனின் தாயாருக்குக் கொடுமைகள் செய்யத் தொடங்கினாளாம். மனைவி தாய்க்குச் செய்யும் அந்தக் கொடுமையைத் தடுக்க முடியாமல் நோய்வாய்ப்பட்ட கணவன் அதனைச் சகிக்க வேண்டி வந்ததாம்.

சில காலத்தின் பின்னர் கணவனைப் பற்றியிருந்த நோய் மாறிப்போக அக் கணவன் பழையபடி ஆரோக்கியம் பெற்றானாம். ஆரோக்கியம் பெற்றுவிட்ட அந்த மகன், அதுவரை தன் தாய்க்கு மனைவி செய்த கொடுமையைச் சகிக்க முடியாமல் தன் மனைவியை அடக்கி, தன் தாய்க்கான பழைய உரிமையைப் பெற்றுக் கொடுத்தானாம். தான் செய்தது தவறென்று உணர்ந்து அவன் மனைவியும், மாமியாரோடு இணைந்து வாழத் தொடங்கினாளாம்.

இவர்களது பக்கத்து வீட்டில் இருந்த, தன் மனைவிக்கு மனதால் அடிமைப்பட்டுவிட்ட ஓர் அயலவன், ‘ஆஹா! அடுத்த வீட்டு மனைவிக்கு அநியாயம் நடந்து விட்டதைப் பாருங்கள்’ என்று ஓலமிட, அவனைப் பார்த்து ஊரே சிரிக்கத் தொடங்கியதாம்.

தனது ‘குயில் பாட்டின்’ முடிவில் பாரதியார், ‘ஆன்ற தமிழ்ப் புலவீர்! கற்பனையே ஆனாலும் வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க யாதேனும் சற்றே இடமிருந்தால் கூறீரோ’ என்று கூறியிருப்பார். இந்த அடிகளைப் படித்த பிறகுதான், அவர் முன் சொன்ன கதைக்குள் அதுவரை ஆழ்ந்திருக்கும் உண்மைபற்றிப் பலரும் தேட ஆரம்பித்தார்கள். பாரதியாரின் அதே அடிகளை, நான் மேற்சொன்ன கதைக்கும் பொருத்தலாம் போல் இருக்கிறது. நீங்களும் சற்று ஆழ்ந்து தேடினால் நான் முன் சொன்ன இந்தக் கதைக்குள் உங்கள் கேள்விக்கான பதில் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

*சல்லடையார் சலிப்பு - கதையும் முடிஞ்சு தாம் கத்தரிக்காயும் காய்ச்சுதாம் ஹி...ஹி....ஹி...!*

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- பொதுச்சபையைக் கூட்டிப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்த பிறகு, செயலாளர் தேர்வில் குழப்பம் உண்டாக, அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, புதிய தேர்வுகளைக் காலவரையறையின்றி ஒத்தி வைத்துவிட்டு மாவை வெளிநாடு சென்றுவிட்டாராமே? தமிழரசுக் கட்சிக்குள் என்னதான் நடந்து கொண்டிருக்கிறது?**

**உலக்கையார் பதில் :-** ஆகாயத்தைத் தொடப் போவதாகச் சொல்லிக் கொண்டு, பாதாளம் நோக்கிப் பாய்வதில் இன்றைக்குத் தமிழரசுக் கட்சிக்குத் தான் முதலிடம். வெட்கம் என்பது என்ன என்று தெரியாதது போல அக் கட்சியின் முன்னாள் தலைவர் தொட்டு, இந்நாள் தலைவர் வரை நடந்து



**(12ஆம் பக்கம் பார்க்க)**

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கிறார்கள். உறுப்பினர்களில் பலரும் கூட அப்படித்தான்.

ஆளையாள் குற்றம் சாட்டிக்கொண்டு அவர்கள் அனைவருமே பிழை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் குற்றம் சொல்லி என்ன பயன்? இது பிழை என்று அவர்களைக் கண்டிக்க நம் இனத்தாருக்குத் தகுதியில்லாமல் இருக்கிறது. நம்மவரை மயக்க பிரபாகரன், தேசியத் தலைவர், தமிழீழம், இனவுரிமை போன்ற வெறும் சொற்களே போதுமானதாய் இருக்கின்றது. இச் சொற்களில் மயங்கும் நம் இனத்தார் நம் தலைமைகளின் செயல் பற்றிக் கவலை கொள்வதில்லை. இத் தலைவர்கள் தம் கீழ்மைச் செய்ற்பாடுகளால் எதிரிகளுக்குச் செங்கம்பளம் விரித்து வரவேற்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

1980 களில் என்று நினைக்கிறேன் ‘யாருக்கும் வெட்கமில்லை’ என்று ஒரு சினிமாப் படம் வந்தது. அப்படத்தில் வந்த ஒரு பாடல் வரிகள் தான் மனதில் வருகின்றன.

ஊருக்கும் வெட்கமில்லை இந்த உலகுக்கும் வெட்கமில்லை
யாருக்கும் வெட்கமில்லை இதிலே அவளுக்கு (அவருக்கு) வெட்கமென்ன?

மேலும் கீழும் கோடுகள் போடு அதுதான் ஓவியம் நீ சொன்னால் காவியம்
ஓவியம் என்றால் என்னவென்று தெரிந்தவர் இல்லையடா
குருடர்கள் உலகில் கண்கள் இருந்தால் அதுதான் தொல்லையடா

அத்தனை பழமும் சொத்தைகள்தானே ஆண்டவன் படைப்பினிலே
அத்திப்பழத்தைக் குற்றம் கூற யாருக்கும் வெட்கமில்லை
மூடர்களே பிறர் குற்றத்தை மறந்து முதுகைப் பாருங்கள்
முதுகினில் இருக்கு ஆயிரம் அழுக்கு அதனைக் கழுவுங்கள்

சுட்டும் விரலால் எதிரியை காட்டி குற்றம் கூறுகையில்
மற்றும் மூன்று விரல்கள் உங்கள் மார்பினைக் காட்டுதடா
எங்கேயாவது மனிதன் ஒருவன் இருந்தால் சொல்லுங்கள்
இருக்கும் அவனும் புனிதன் என்றால் என்னிடம் காட்டுங்கள்

அப்பன் தவறு பிள்ளைக்கு தெரிந்தால் அவனுக்கு வெட்கமில்லை
அத்தனை பேரையும் படைத்தானே அந்த சிவனுக்கும் வெட்கமில்லை
இப்போதிந்த உலகம் முழுவதும் எவனுக்கும் வெட்கமில்லை
எல்லார் கதையும் ஒன்றாய் முடிக்கும் எமனுக்கும் வெட்கமில்லை

இப்பாடலின் சில வரிகளை ஆங்காங்கு கொஞ்சம் மாற்றினால், தமிழரசுக் கட்சியின் நிலையும், நம் ஈழத்தமிழரின் இன்றைய நிலையும் தானாகப் புரியும் என்று நினைக்கிறேன். முன்பொருமுறை தந்தை செல்வா அவர்கள் ‘ஈழத் தமிழ் இனத்தை இனிக் கடவுள் தான் காப்பற்ற வேண்டும்’ என்று சொன்னதாகச் சொல்வார்கள். இன்றைய நிலையில் இந்த இனத்தைக் கடவுளாலும் காப்பற்ற முடியுமா? என்று சந்தேகம் இருக்கிறது.

**சல்லடையார் சலிப்பு - சூப்பர்! பதிலை விடப் பாட்டு, பிரமாதமுங்கோ.......**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- உங்களைச் ‘சங்கி’, ‘சங்கி’ என்று திட்டியது போய், இப்போது இராமர் கோவில் திறப்பு விழாவிற்கு சென்று வந்த பிரபல பேச்சாளர் பாரதி பாஸ்கரையும் ‘சங்கி’, ‘சங்கி’ என்று திட்டத் தொடங்கியிருக்கிறார்களே. என்ன? பேச்சாளர்கள் அனைவரும் சங்கிகளாக மாறிக் கொண்டிருக்கிறீர்களா?**

**உலக்கையார் பதில் :-** அந்த அநியாயத்தை ஏன் கேட்கிறீர்கள்? நாங்கள் சங்கிகளாக மாற விரும்பவில்லை. இவர்கள் தான் எங்களைச் சங்கிகளாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதே போக்கில் போனால் தமிழர்கள் அனைவரையும் இவர்கள் சங்கிகளாக மாற்றிவிடுவார்கள் என்று நினைக்கிறேன்.

ஒரு கதை தான் ஞாபகத்திற்கு வருகிறது.

ஓர் ஆலயத்தின் வாசலில் சாமியார் ஒருவர் இருந்து வந்தாராம். அந்த ஆலயத்தின் எதிர்ப்புறம் இருந்த வீட்டில், ஓர் பரத்தை வாழ்ந்து வந்தாளாம். அவளது செயல் அத் துறவிக்குப் பிடிக்கவில்லையாம். அந்த பெண்ணின் வீட்டிற்கு யாராவது ‘கஸ்டமர்ஸ்’ சென்றால், சாமியார் தனக்கு அருகில் ஓர் கல்லை எடுத்து வைத்துக் கொள்வாராம். நாளடைவில் அவர் சேர்த்த கற்கள் மலை போல் குவிந்தனவாம்.

ஒருநாள் அந்தச் சாமியாரும், பரத்தையும் ஓரே நேரத்தில் இறந்து போனார்களாம். அவ் இருவரையும் யமதூதர்கள் யமனின் முன்னால் கொண்டுவந்து நிறுத்தினராம். யமன், தனக்குச் சொர்க்கத்தையும், அப்பரத்தைக்கு நரகத்தையும் அளிப்பார் என நம்பியிருந்த சாமியாருக்கு யமனின் தீர்ப்பைக் கேட்டதும் அதிர்ச்சி உண்டாயிற்றாம். யமன் அப்பெண்ணிற்கு சொர்க்கம். உனக்கு நரகம் என்று சாமியாரைப் பார்த்துச் சொன்னதும் இது எப்படி நியாயம் ஆகும்? என்று சாமியார் யமனுடன் சண்டை போட்டாராம்.

யமன் சிரித்தபடி நீ கோவில் வாசலில் இருந்து அப்பரத்தை வீட்டையே நினைத்துக் கொண்டிருந்தாய். அவளோ அங்கிருந்தபடி கோவிலையே நினைத்துக் கொண்டிருந்தாள். அதனால்தான்



அவளுக்கு சொர்க்கம் உனக்கு நரகம் என்றாராம்.

நாங்கள் சங்கியோ இல்லையோ எங்களைச் ‘சங்கி’ என்று சொல்லிச் சொல்லி அவர்கள் தான் உண்மைச் சங்கிகளாய் மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

பாரதி பாஸ்கர், சுய சிந்தனை உள்ள ஒருவர். அவர் அந்தணர் மரபில் வந்தவர். ஆழ்ந்த இறை நம்பிக்கை உள்ளவர். கம்பனைக் கற்றுக்கற்று இராமன் மேல் எல்லையற்ற காதல் கொண்டிருப்பவர். அத்தகையவர், இராமர் கோவில் தரிசனத்திற்கு சென்றதைக் கண்டிக்க எவருக்கு உரிமையிருக்கிறது?

மற்றவர்களின் உரிமையில் தலையிடக் கூடாது என்ற நாகரீகம் கூட இவர்களுக்குத் தெரியவில்லை.

கடவுள் நம்பிக்கை இல்லை என்று சொல்கிற தலைவர்களின் குடும்பத்தார் பலரும், கோவில் கோவிலாகச் சென்று, தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, வரிசையில் நிற்கும் ஏழைகளை ஒதுக்கி விட்டு முன்னே போய்க் கும்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அபிஷேகம், ஹோமம், பஜனை என வழிபாடுகளில் மூழ்கியிருக்கும் அவர்களை யாரும் சங்கிகள் என்று சொல்வதாய்த் தெரியவில்லை. எங்களுக்குத் தான் சங்கி என்று பட்டம் தர முனைகிறார்கள்.

இவர்களின் அறியாமையை நினைக்கப் பரிதாபமாக இருக்கிறது.

**சல்லடையார் சலிப்பு - உதாரணத்திற்காக சொன்ன கதையில் வரும், ‘பரத்தை’ என்ற சொல்லை வைத்துக் கொண்டு இனி வாரிதி யாரை ‘நோண்டப்’ போகிறாங்கள்...**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



# மன்னார் இசைமாலைத்தாழ்வில் புதனன்று பிரதேச மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

எட்டு வருடங்களுக்கு முன்னர் அரசாங்கத்தினால் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட காணியை உடனடியாக விடுவிக்குமாறு கோரி மன்னார் பிரதேச மக்கள் குழுவொன்று போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இசைமாலைத்தாழ்வுப் பிரதேச மக்கள் தமது கிராமத்தில் வசிக்கும் 113 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக கொம்பன்சாய்ந்தகுளம் பிரதேசத்தில் 46 ஏக்கர் காணியை அரசாங்கம் ஒதுக்கீடு செய்த போதிலும் வனத்துறையினர் இதுவரையில் அந்த காணியை விடுவிக்கவில்லை எனத் தெரிவித்து கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை கடந்த புதனன்று முன்னெடுத்தனர்.

"எங்கள் ஊருக்கு அருகில் இருக்கும் கொம்பன்சாய்ந்த குளத்தில் எங்கள் மக்களுக்கு குடியிருப்புக் காணி அவசியம். எங்கள் ஊரில் ஒரு வீட்டில் மூன்று, நான்கு குடும்பங்கள் வாழ்கின்றோம். இடவசதி போதாது. ஆகவேதான் இன்று போராடுகின்றோம். 2016ஆம் ஆண்டு இந்தக் காணியை எங்களுக்கு வழங்குவதாக வட மாகாண அதிகாரிகள் அறிவித்தனர். ஆனால் வனவளத் திணைக்களத்தினர் இதனை இன்னும் விடுவிக்கவில்லை. முன்னாள் பிரதேச செயலாளர் இதனை செய்வார் எனக் கூறினாலும் செய்யவில்லை." – என்று போராட்டத்தில் கலந்து கொண்ட பெண் ஒருவர் தெரிவித்தார்.

இசைமாலைதாழ்வு பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு வீடுகள் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட காணியின் வேறு பிரதேசங்களைச் சேர்ந்த இருவர் சுமார் ஐந்து ஏக்கர் நிலத்தை அபகரித்து விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர்கள் மீது அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

போராட்டம் முன்னெடுக்கப்பட்ட இடத்துக்கு வந்த நானாட்டான் உதவி பிரதேச செயலாளரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை போராட்டக்காரர்கள் கையளித்தனர்.

இசைமாலைதாழ்வு கிராம மக்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மாவட்ட உதவிச் செயலாளரிடமும் கையளித்தனர் என பிரதேச ஊடகவியலாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.









# நடைபாதை வியாபார நிலையங்கள் வவுனியா நகரசபையினால் அகற்றம்

(வசந்தன்)

வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள நடைபாதை வியாபார நிலையங்கள் நகரசபையால் நேற்று அகற்றப்பட்டன.

வவுனியா பொது வைத்திய சாலை சந்தியில் இருந்து ஹொரவப் பொத்தான வீதி மற்றும் சந்தை உள் வட்ட வீதி ஆகியவை நடைபாதை வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட் டுள்ளமையால் பாதசாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் அடிக்கடி வாகன நெரிசல் ஏற்பட்டுவருவதுடன், விபத் துக்களை சந்திக்கும் நிலைமையும் நேர்ந்துள்ளது.

நடைபாதைகளை ஆக்கிரமித்து வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால் பாதசாரிகள் பிரதான வீதியால் நடந்து செல்லவேண்டிய அவலநிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் நகரசபை நடவ டிக்கை எடுத்திருந்தபோதிலும் தினந் தோறும் நடைபாதையினை ஆக்கிர மிக்கும் வியாபார நிலையங்கள் அதி கரித்துச் செல்கின்றன.

இந்நிலையில் சந்தைசுற்றுவட்ட வீதிக்கு நேற்றைய தினம் சென்ற வவுனியா நகரசபை உத்தியோகத்-தர்கள் மற்றும் போக்குவரத்துப் பொலி ஸார் நடைபாதை வியாபார நிலை யங்களை அகற்றியமயுடன், அவர்களது பொருள்களையும் பறிமுதல் செய்தனர்.

இதேவேளை ஹொரவப்பொத்தான வீதியில் அமைந்துள்ள நடைபாதை விற்பனை நிலையங்களையும் அகற்று வதற்கான நடவடிக்கையை நகரசபை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# வவுனியாவில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலயத்தை முற்றுகையிட்ட மக்கள்

## பலப்படுத்தப்பட்ட பொலிஸாரின் பாதுகாப்பு

**(வசந்தன்)**

வவுனியாவில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலத்தின் பிரதான வாயிலைப் பொதுமக்கள் முற்றுகையிட்டமையினால் ஏற்பட்ட பதற்ற நிலைமையையடுத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

குடிவரவு, குடியகல்வு திணைக்கள வாயிலின் முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா குடிவரவு, குடியகல்வுத் திணைக்களப் பிராந்திய காரியாலயத்தில் சாதாரண மற்றும் ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டைப் பெறுவதற்காக நேற்று முன்தினம் இரவு முதல் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் காரியாலயம் முன்பாக வரிசையில் காத்திருந்தமையுடன் வரிசையில் காத்திருந்தவர்களுக்கான வரிசை இலக்கம் பொலிஸாரினால் வழங்கப்பட்டது. வரிசையில் நின்றவர்களின் பெயர்களையும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் பதிவு மேற்கொண்டனர்.

இந்நிலையில் 85 ஆம் இலக்கம் பெற்ற நபர் வாயிலின் வெளியே வரிசையில் நிற்கத்தக்கதாக இனி எவருக்கும் கடவுச்சீட்டு வழங்க முடியாது எனவும், 160 நபர்களை தாம் ஒரு நாள் சேவையின் கீழ் உள்வாங்கியுள்ளமையுடன் 50 நபர்களை சாதாரண சேவையின் கீழ் உள்வாங்கியுள்ளமையினால் பிறிதொரு தினத்தில் வருமாறும் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக ஆத்திரமடைந்த வரிசையின் நின்ற பொதுமக்கள், 85 ஆம் இலக்கம் பெற்ற நபர் வெளியே நிற்க எவ்வாறு 160ஆம் இலக்கம் பெற்ற நபர் உள்ளே செல்ல முடியும் என்பதுடன் அங்கு நின்ற பெண்கள் உள்ளடங்கலான மாபிய கும்பல் கடவுச்சீட்டு பெற வருபவர்களிடம் பணம் பெற்று வரிசைகளுக்கு இடையே அவர்களை உள்நுழைக்கின்றனர் என தெரிவித்தமையை அடுத்து அங்கு குழப்பநிலமை ஏற்பட்டது. திணைக்கள பிரதான வாயிலை வழிமறித்து தமது எதிர்ப்பினையும் பொதுமக்கள் வெளிப்படுத்திருந்தனர்.

அதனால் கடவுச்சீட்டு திணைக்களம் முன்பாக பதற்ற நிலைமை நிலவியதுடன் வவுனியா பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸ் நிலைய சமூக சேவை நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.கே.கே. பிரியரத்தன தலைமையிலான பொலிஸ் குழுவினர் குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள பிராந்திய காரியாலயத்தினுள் சென்று ஆணையாளருடன் கலந்துரையாடினார்.

இன்று மேலதிக நபர்களை உள்ளெடுக்க முடியாது எனவும் , பிறிதொரு தினத்தில் கடவுச்சீட்டைப் பெறுவதற்கு முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கான இலக்கம் வழங்குவதாக ஆணையாளர் உறுதிமொழி அளித்துள்ளார் எனவும், கடவுச்சீட்டைப் பெற வருபவர்களிடம் பணம் பெற்று வரிசையில் ஈடுபடுத்துபவர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளப்படும் எனவும், வவுனியா பொலிஸ் நிலைய சமூக சேவை நிலைய பொறுப்பதிகாரி ஆர்.கே.கே.பிரியரத்தன குழப்பத்தில் ஈடுபட்ட மக்களிடம் தெரிவித்தயைடுத்து சுமுகமான நிலைமை திரும்பியது.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளினால் பிறிதொரு தினத்தில் முன்னுரிமை அடிப்படையில் கடவுச்சீட்டை பெறுவதற்கான இலக்கமும் இதன்போது வழங்கப்பட்டது.








# அரசியல் ரீதியான சுதந்திரம்தான் கிட்டியது பொருளாதார சுதந்திரம் கிடைக்கவில்லை!

## இப்படிக் கூறுகின்றார் பேராசிரியர் திஸ்ஸ விதாரண எம்.பி.



இலங்கைக்கு 1948 ஆம் ஆண்டு அரசியல் ரீதியான சுதந்திரம் கிடைத்த போதிலும் பொருளாதர ரீதியான சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை எனவும் தற்போதைய அரசாங்கம் அணிசேரா கொள்கையில் இருந்து விலகி, அமெரிக்க சார்பு கொள்கையை நோக்கி நாட்டை கொண்டு செல்வதாகவும் லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிலங்கள் மற்றும் தேசிய பொருளாதாரத்தை வெளிநாடுகள் சுரண்ட இடமளிக்காது, உண்மையான தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நாட்டுக்கு தேவையாற்றை நாட்டுக்குள் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை களை ஊக்குவிக்க வேண்டும்.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி சுதந்திரத்தை பெற்றுக்கொண்டது. பிரித்தானியாவின் ஆளுகைக்குள் கீழ் இருந்த நாட்டை மீட்பதற்காக என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, லெஸ்லி பீரிஸ் போன்ற லங்கா சம சமாஜக் கட்சியின் தலைவர்கள் சிறைக் குச் சென்றனர்.

இறுதியாக 1972 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி இலங்கையை குடியரசாக மாற்றும் வரை எமது கட்சியின் தலைவர்கள் பங்களிப்புகளை வழங்கினர்.

முதலாளித்துவ பொருளாதார முறை யானது பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் கையாண்டு வந்த பொருளாதார முறையின் கீழ் விரிவடைந்தது.

குறிப்பாக தேயிலை, இறப்பர் போன்ற வணிக பயிர்செய்கைகள் பிர தானமாக பிரித்தானிய முதலாளித்துவ வகுப்பினரிடம் இருந்தது. உணவுப் பயிர்கள் மற்றும் சிறுத்தொழில்கள் தேசிய முதலாளித்துவ வகுப்பின ரிடம் இருந்தது.

பெருந்தோட்டங்களுக்கான தொழி லாளிகள் இந்தியாவில் இருந்து இறக் குமதி செய்யப்பட்டனர். தேசிய தொழி லாளர் வகுப்பும் படிப்படியாக விரிவ டைந்தது.

தொழிலாளர் சட்டங்கள் மூலம் தொழிலாளிகளின் உரிமைகளை பாதுகாத்து, நியாயமாக ஊதியத்தை வென்றெடுத்த தொழிலாளர் வகுப்புக் கான தொழிற்சங்க அமைப்பான லங்க சமசமாஜக்கட்சி முன்னேறியது. – எனவும் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்துள்ளார்.



## மாடியிலிருந்து வீழ்ந்து மாணவன் உயிரிழப்பு!

தனது நண்பர்களுடன் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்த 14 வயது டைய பாடசாலை மாணவன் ஒருவன் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடொன்றின் மாடியிலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந் துள்ளான் என தொரடியாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்ற. முன்தினம் வியாழைக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கல்பொத்தவத்தை ஹிந்தகொல்ல திகம் பிட்டிய வித்தியாலயத்தில் தரம் ஒன்பதில் கல்வி பயிலும் மாணவனே உயிரிழந் துள்ளான்.

இந்த மாணவன் தனது நண்பர்கள் நால்வருடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போது வீட்டின் இரண்டாவது மாடியிலிருந்து கீழே வீழ்ந்துள்ளான் எனப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.



## 72 சுகாதார தொழிற்சங்கங்களின் பணிப்பகிஷ்கரிப்பு காலை நிறைவு

72 சுகாதார தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கையை இன்று காலை 6.30 மணியுடன் நிறைவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமக்கான தீர்வுகள் வழங்கப் படாத பட்சத்தில், எதிர்வரும் புதன் கிழமை முதல் மீண்டும் தொழிற் சங்க நடவடிக்கை முன்னெடுக்கப் படுமென தொழிற்சங்கங்கள் எச்ச ரித்துள்ளன.

72 சுகாதார தொழிற்சங்கங் கள் நேற்று இரண்டாவது நாளா கவும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட் டன.

இதனால், நோயாளர் பதிவுகள், மருந்து விநியோகம் மற்றும் கிளி னிக் சேவைகள் நேற்றைய தினமும் முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வங்குரோத்தடைந்த நாடு என்று குத்தப்பட்ட முத்திரையிலிருந்து இன்று விடுபட்டுள்ளோம்

## சுதந்திர தினத்தை ஒட்டி ஜனாதிபதி ரணில் பெருமிதம்



இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் போது, வங்குரோத்தடைந்த நாடு என்று முத்திரை குத்தப்பட்டிருந்தோம். ஆனால், 76ஆவது சுதந்திர தினத்தில், பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும், அந்த நிலையிலிருந்து விடுபட்டு, பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் இப்படிக் கூறப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் போது, வங்குரோத்தடைந்த நாடு என்று முத்திரை குத்தப்பட்டிருந்தோம். ஆனால், 76ஆவது சுதந்திர தினத்தில், பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும், அந்த நிலையிலிருந்து விடுபட்டு, பொருளாதாரத்தை நிலையான நிலைக்கு கொண்டு வர முடிந்துள்ளது.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள், துன்பங்களைச் சகித்துக் கொண்டு நாட்டை மீளக் கட்டியெழுப்பும் நீண்ட கால வேலைத்திட்டத்திற்கு ஆதரவளித்தமையால் எம்மால் மெதுவாக முன்னேற முடிந்தது.

இந்தப் பாதையில் தொடர்ந்து செல்லும் போது, சிரமங்கள் யாவும் மறைந்துவிடும். வாழ்க்கைச் சுமை குறையும். பொருளாதாரம் வலுவடையும். இலங்கை தாய்க்கு மீண்டும் விடிவு கிட்டும்.

1948 இல் இலங்கை சுதந்திர நாடாக மாறிய போது, இலங்கை கீழைத்தேய பிராந்தியத்தில் வளர்ச்சியடைந்த நாடாக மாற வேண்டும் என்பதே சர்வதேசத்தின் எதிர்பார்ப்பாக இருந்தது.

அதற்கான அனைத்து பின்னணி காரணிகளும் எங்களிடம் இருந்தன. ஆனால் இறுதியில் நாம் வங்குரோத்தடைந்த நாடாக மாற நேரிட்டது.

கடந்த கால தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது. இலங்கையின் தற்போதைய பாதை உலகத்திற்கு நம்பிக்கை ஏற்படுத்தியிருப்பதால், இந்தப் பாதையில் தொடர்ந்து பயணிக்கவும், மீண்டும் சுபீட்சத்தைக் கொண்டுவரவும் இந்த சுதந்திர தினத்தில் உறுதி கொள்வோம்.

நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பெருமைமிக்க பணிக்கு இலங்கையிலும் நாட்டுக்கு வெளியிலும் வாழும் அனைத்து இலங்கையர்களும் தங்களால் முடிந்தளவு பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் செயலகம் நிகழ்நிலை காப்புச் சட்டம் குறித்து அதிருப்தி!

இலங்கையில் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டம் மனித உரிமைகள் அம்சங்களில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் அலுவலகம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை மீளாய்வு செய்து சட்டத்தைத் திருத்தம் செய்யுமாறு மனித உரிமைகள் கவுன்ஸிலின் அலுவலகம் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் அலுவலகம் தனது உத்தியோகப்பூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் மேற்கண்டவாறு பதிவேற்றம் செய்துள்ளது.

நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்நிலை காப்புச் சட்டத்தினால் கருத்து மற்றும் பேச்சு சுதந்திரத்துக்கு தடையேற்படும். இந்தச் சட்டத்தின் ஊடாக சிவில் சமூகம். கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல துறைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை மீள்பரிசீலனை செய்து சட்டத்தை திருத்தம் செய்ய இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்துவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.




# புதிய அரசியல் கட்சி ஆரம்பித்த நடிகர் விஜய்க்கு நாமல் வாழ்த்து

புதிய அரசியல் கட்சி ஆரம்பித்துள்ள நடிகர் விஜய்க்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜயின் அரசியல் பிரவேசத்திற்கும் அவர் ஆரம்பித்துள்ள புதிய அத்தியாயத்திற்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன் என நாமல் ராஜபக்ஷ தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

நடிகர் விஜய் "தமிழக வெற்றி கழகம்" என்ற கட்சியை ஆரம்பித்துள்ளார்.

டில்லியில் உள்ள இந்திய தலைமை தேர்தல் ஆணையத்திற்கு சென்ற நடிகர் விஜயின் மக்கள் இயக்க பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் அதனை கட்சியாக உத்தியோகபூர்வமாக பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளார்.

தேர்தல் ஆணையம் அங்கீகாரம் வழங்கிய பின்னர் கட்சியின் கொடி, சின்னம் அறிவிக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

# கரிநாள் அனுஷ்டிப்புக்கும் பேரணிக்கும் விக்னேஸ்வரனின் கட்சியும் முழு ஆதரவு



யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நாளை பெப்ரவரி 4ஆம் திகதியைக் கரிநாள் எனப் பிரகடனப்படுத்தி, இந்நாளில் கிளிநொச்சி நகரில் முன்னெடுக்கவுள்ள போராட்டத்திற்கும் பேரணிக்கும் தமிழ் மக்கள் கூட்டணி தனது பூரண ஆதரவினைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், முன்னாள் வட மாகாண முதலமைச்சரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அறிக்கை ஒன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:–

1948ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதியானது ஒற்றையாட்சி என்ற விருட்சத்தின் கீழ் அதிகாரம் முழுவதையும் பெரும்பான்மை சிங்களவரிடம் கொடுத்து மதம், மொழி, இனம் போன்ற பேரினவாத கொள்கைகளை சிறுபான்மை இனத்தின் மீது மக்கள் தொகை பலத்தின் மூலம் பெரும்பான்மை சிங்கள மக்கள் திணிக்க ஏதுவாகவிட்டுச் சென்றநாள்.

இவ்வாறு அதிகாரம் சிங்கள பெரும்பான்மையாளர்களிடம் கையளிக்கப்பட்ட பிறகு அதன் கோரமுகம் தெரிய ஆரம்பித்தது. இங்கிலாந்தின் காலனித்துவத்திலிருந்து இலங்கை விடுபட்ட பின்னர் மாறி மாறி ஆட்சி பீடம் ஏறிய சிங்கள, பௌத்த பேரினவாத அரசுகள் தமிழ் மக்களை அடக்கி, இனப்படுகொலை செய்து, அவர்களின் பாரம்பரிய நிலங்களை எவ்வாறு அபகரிக்கலாம் என்று சிந்தித்துச் செயலாற்றினர். அதற்கு சிங்களப் படையினர் துணையாக நின்றனர்.

அதன் நீட்சியாக இன்றும் தமிழர்களுக்கு எதிரான கட்டமைப்பு சார் இனப்படுகொலை பல்வேறு வடிவங்களில் தொடருகின்றன. தமிழர் தாயகப் பிரதேசங்களில் அவர்களின் இருப்பினை இல்லாதொழிக்கும் நோக்குடன் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் மிக நுட்பமான முறையில் பறித்தெடுக்கப்பட்டு சிங்கள குடியேற்றங்களும் பௌத்த மயமாக்கல்களும் மிகத் தாராளமாக நடைபெறுகின்றன. அதே நேரம் தமிழர்களை பொருளாதார ரீதியிலும் நலிவடையச் செய்யும் நோக்குடன் மட்டக்களப்பு மேய்ச்சல் தரைகளை அத்துமீறி அபகரித்தல், எமது கடல் வளங்களைச் சுரண்டுதல் போன்ற பல அடக்கு முறைகள் தொடருகின்றன.

இந் நிலையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இக் கட்டமைப்பு சார் இனப்படுகொலைகளுக்கு தீர்வு காணும் வகையில் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து யாழ். பல்கலைக்கழக சமூகம் முன்னெடுக்கின்ற இப் போராட்டத்திற்கு நாம் பூரண ஆதரவைத் தெரிவிக்கின்றமையோடு அனைத்துத் தரப்பினர்களும் இப் பேரணியில் கலந்து கொள்ளுமாறும் அன்போடும் உரிமையோடும் அழைக்கின்றோம். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு எதிரான மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்று நிறைவு

அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை நேற்று நிறைவடைந்தது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகருக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக நீதியரசர்கள் குழாம் விசாரணை நிறைவில் அறிவித்தது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் மலல்கொட, ஏ.எச்.எம்.டி. நவாஸ், ஷிரான் குணரத்ன, அர்ஜுன அபேசேகர ஆகிய ஐவர் அடங்கிய நீதியசர்கள் குழாம் முன்னிலையில் ஆறு நாள்கள் மனுக்கள் தொடர்பிலான விசாரணை நடைபெற்றது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் சில சரத்துகள் அரசமைப்பிற்கு முரணானவை எனத் தீர்ப்பு வழங்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் 31 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.




## லிட்ரோ எரிவாயுவின் விலையில் மாற்றமில்லை

பெப்ரவரி மாதத்தில் லிட்ரோ சமையல் எரிவாயு விலையில் திருத்தம் மேற்கொள்ளப்போவதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவன தலைவர் முதித்த பீரிஸ் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இதனை அறிவித்தார்.

உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டிருந்தாலும் அதன் நட்டத்தை லிட்ரோ நிறுவனம் தாங்கிக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார ரீதியாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், எரிவாயு விலையை அதிகரிக்கப்போவதில்லை எனவும் லிட்ரோ தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.



## பாணின் நிறை மற்றும் விலையை காட்சிப்படுத்துவது கட்டாயம்

### வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

பாணின் நிறை மற்றும் விலையைக் காட்சிப்படுத்துவதை கட்டாயமாக்கி நுகர்வோர் விவகார அதிகார சபையினால் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு இறாத்தல் பாணின் நிறை 450 கிராமாகவும், அரை இறாத்தல் பாணின் நிறை 225 கிராமாகவும் இருக்க வேண்டியது கட்டாயமானதென அறிவிக்கப்பட்டுள்ளது.

விற்பனை செய்யப்படும் பாணின் நிறை தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.





## இறைச்சிக் கடைகளை நாளை மூட அறிவுறுத்து

(பாறுக் ஷிஹான்)

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாளை 04 ஆம் திகதி ஞாயிறன்று கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லையினுள் விலங்கறுமனை மற்றும் இறைச்சிக் கடைகள் யாவும் பூட்டப்படும் என்று மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அறிவித்துள்ளார்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அறிவித்தலுக்கு அமைவாக அன்றைய தினம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி, கோழியிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களையும் விலங்கறுமனைகளையும் திறக்காமல் மூடிவிடுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதம் மூலம் ஆணையாளர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 03.02.2024




இன்று முன்னேற்றத்துக்கு உகந்த நாள். உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக வெற்றி காண்பீர்கள்.

இன்று பணியிடத்தில் நல்ல முன்னேற்றமும் வளர்ச்சியும் காணப்படும். நீங்கள் உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் இன்றைய நாளை இனிமையாகக் கழிப்பீர்கள்.இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று உங்கள் நிதிநிலையில் வளர்ச்சி காணப்படும். உங்கள் சேமிப்பும் அதிகரிக்கும்.

இன்று சிறந்த ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் வருத்ததுடனும் மன உளைச்சலுடனும் காணப்படுவீர்கள். உங்கள் திறமைகளை சிறந்த முறையில் பயன்படுத்தால் முன்னேற்றம் கிட்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். திறமையாக பணியாற்ற நீங்கள் சிறப்பாக திட்டமிட வேண்டும்.

இன்றைய நாள் உங்கள் துணையிடம் கருத்துக்களை பரிமாறுவதற்கு உகந்த நாள் அல்ல. எனவே உங்கள் தொடர்புகளில் கவனம் செலுத்துவது சிறந்தது.

பங்கு வர்த்தகம் மூலம் நீங்கள் பணம் சம்பாதிக்கலாம். என்றாலும் உங்களால் அதிகமாக சேமிக்க இயலாது.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். அதிக நீரைப் பருகவும்.




இன்று இழப்புகள் ஏற்படாத வகையில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்கப் படாமல் இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் திறமையோடு முடிப்பதற்கு திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு சிறிது வன்மையாக நடந்து கொள்வீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

அதிக பொறுப்புகள் காரணமாக அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

வயிறு உப்பசம் காரணமாக அவதிப்பட நேரலாம். காரமான மற்றும் எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும். அதிக நீரைப் பருகவும்.




இன்று உங்கள் செயல்களில் மும்முரமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்றைய நாளை முக்கிய முடிவுகள் எடுக்க பயன்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணி நிமித்தமான பயணம் காணப்படும். அதன் மூலம் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவதன் மூலம் ஒன்றாக செயல்படுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு காணப்படும். இன்று எதிர் காலத்திற்காக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்றைய செயல்களின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமைய சிறந்த முறையில் திட்டமிட வேண்டும். முக்கியமான முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுதல் வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எச்சரிக்கையும் சிறந்த திட்டமிடலும் அவசியம்.

இன்று அமைதியாக இருக்கவேண்டும். உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள்ள வேண்டாம். உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும். பணத்தை சாதுர்யமாக செலவு செய்ய வேண்டும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று சில ஏமாற்றங்கள் காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். மற்றவர்கள் தரும் வாக்குறுதிகளை சார்ந்து இருக்க வேண்டாம். உங்கள் விருப்பங்கள் நிறைவேற நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்சிவசப்படுவீகள். இதனால் உங்கள் உறவில் அமைதியின்மை காணப்படும்.

பண வரவு காணப்பட்டலும் அதிகரிக்கும் செலவுகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உடல் உழைப்பின் காரணமாக கால் வலி ஏற்படலாம். உடற் பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது நல்லது.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நற்பலன்களை அடையலாம். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு இன்று சிறந்தது.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல்கள் காணப்படும். இருவரும் கவனமாக உரையாட வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவினங்களை சமாளிக்க வேண்டியிருக்கும்.

பரபரப்பான பணிகள் காரணமாக தலைவலி அல்லது கால் வலி ஏற்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று நற்பலன்கள் அதிகம் கிடைக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணியில் வளர்ச்சியும் முன்னேற்றமும் காணப்படும். சக பணியாளர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் புரிந்துணர்வும் நல்லிணக்கமும் காணப்படும்.

பூர்வீக சொத்துக்கள் மூலம் பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவீர்கள்.

இன்று ஆற்றலுடனும் ஆரோக்கியத்துடனும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.02.2024

## தனுசு

இன்று தடைகளையும் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.

## கும்பம்

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற நீங்கள் திட்டமிட வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இருவரும் மனம் திறந்து பேசிக்கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை காணப்படும். அவர்களின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

## மகரம்

உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் செலுத்துவது சிறந்தது.

## மீனம்

இன்று அனுகூலமான நாளாக இருக்கும். உங்கள் மனதில் நேர்மை எண்ணங்கள் காணப்படும். இதன் மூலம் நன்மைகள் நடக்கும்.

இன்று பணிகள் மும்மரமாக காணப்படும். என்றாலும் நீங்கள் உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படுகின்றது. உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். பூர்வீகச் சொத்து வகையில் எதிர்பாராத பணவரவு காணப்படுகிறது.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்றைய நாளைச் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean Group of Companies | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# பாதுகாப்பான வலயமாக அறிவிக்கப்பட்ட ரபா நகரில் தாக்குதல் நடத்த இஸ்ரேல் திட்டம்



பாதுகாப்பான வலயமாக அறிவிக்கப்பட்டிருந்த ரபா தான் இஸ்ரேலிய இராணுவத்தின் அடுத்த இலக்கு என இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் கேலண்ட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“எமது இஸ்ரேல் இராணுவம் கான் யூனிஸில் பணியை முடித்த பிறகு விரைவில் ரஃபா எல்லையை அடைந்து, அதன் எல்லைப் பகுதிகளில் உள்ள ஹமாஸ் பிரிவுகளை அழிக்கும்.

இந்த நடவடிக்கைகள் பயங்கரவாதக் குழுவின் போரிடும் திறனை கடுமையாக பலவீனப்படுத்தும்.” என குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், இஸ்ரேலினால் நடத்தப்பட்ட தாக்குதலில் கடந்த இரண்டு நாள்களில் மட்டும் 105 பலஸ்தீனியர்கள் பலியாகியுள்ளனர்.

மேலும், இஸ்ரேலினால் பாதுகாப்பான வலயமாக அறிவிக்கப்பட்ட ரபா நகருக்கு சுமார் 1.9 மில்லியன் பலஸ்த்தீனியர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரின் இந்த அறிவிப்பானது, சர்வதேச நாடுகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதோடு, பேசுபொருளாகவும் மாறியுள்ளது.

# நைரோபியில் எரிவாயு வெடிப்பு: இருவர் பலி, 200 பேர் காயம்





கென்யாவின் தலைநகர் நைரோபியில் இடம்பெற்ற எரிவாயு வெடி விபத்தில் இருவர் கொல்லப்பட்டுள்ளார். 220 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எம்பகாசி மாவட்டத்தில் நேற்று முன்தினம் எரிவாயு சிலிண்டர்களுடன் பயணித்துக்கொண்டிருந்த லொறி வெடித்து சிதறியதால் பாரிய தீப்பிளம்பு உருவானதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது வீடுகள், வர்த்தக நிலையங்கள், வாகனங்கள் என்பன சேதமடைந்துள்ளன. தொடர்மாடிக்கு அருகில் பாரிய தீப்பிளம்பை காண்பிக்கும் காணொலிகளும் வெளியாகியுள்ளன.

மீட்பு நடவடிக்கைகளிற்காக அந்த பகுதியை சுற்றி வளைத்துள்ள பொலிஸார், மேற்படி பகுதிக்கு வருவதை தவிர்க்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் தீவிபத்து பல தொடர்மாடிகளிற்கு பரவியுள்ளதால் பலர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் வெளியாகியுள்ளது.

அத்துடன், வெடிப்பு சம்பவத்தின் பின்னர் அப்பகுதியில் அதிர்வுகளை உணர்ந்துள்ளோம் என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பாரிய வெடிப்புகள், தீப்பிளம்புகள் ஏற்பட்டதால் மேலும் வெடிப்புகள் சம்பவங்கள் இடம்பெறலாம் என்ற அச்சத்தினால் மக்கள் அங்கும் இங்கும் ஓடியுள்ளனர்.

மேலும் வெடி விபத்தின் பின்னர் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

# காசா போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்தை கடந்தது



இஸ்ரேலுக்கும் ஹமாஸ் படையினருக்கும் இடையே இடம்பெற்று வரும் போர் காரணமாக காஸாவில் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 19 ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன் காயமடைந்த பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கையும் 66 ஆயிரத்து 139 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்த நிலையில் இஸ்ரேலியப் படைகள் நோயாளர் காவுவண்டிகள் மற்றும் தற்காப்புக் குழுவினரை தடுப்பதால், இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பவர்களை மீட்கமுடியாமல் திணறுவதாகவும், இதனால் ஆயிரக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பாலஸ்தீன அமைச்சகம் தெரிவித்துள்ளது.